பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்க: 492

நிறுவனத்தின் பெயர்: புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

புத்தசாசனம்,மதமற்றும் கலாசாரஅலுவல்கள் அமைச்சு

1. புத்தசாசனம், மத மறறும் கலாசார அலுவல்கள் அமைச்சு
2. பொது நம்பிக்கைப் பொறுய்பாளர் திணைக்களம்
3. தொல்பொருளியல் திணைக்களம்
4. முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்பள் திணைக்களம்
5. பௌத்த அலுவல்கள் திணைக்களம்
6. கலாசார அலுவல்கள் திணைக்களம
7. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
8. தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம்
9. தேசிய நூதனசாலைபள் திணைக்களம்
10. கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ர் அதிகாரசபைகள் ஆகியவற்றின் நிதி இயைபுறல் மற்றும் இயக்கச் செயலாற்றுகை தொடர்பாக நிகழ்நிலை தகவல் முகாமைத்துவ முறைமையினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு -2023 நிதியாண்டு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் : 492

நிறுவனத்தின் பெயர் : புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

	குழு இனங்கண்டுள்ள குறைபாடு / குழு வழங்கிய கட்டளை	**குறைபாட்டை சீராக்கல் செய்வதற்காக குழு மேற்கொண்ட நடவடிக்கை/சிபாரிசுகளை /அமுல்படுத்தல்/ தற்போதைய நிலைமை**
1.	கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்துள்ள அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாத காலப்பதிற்குள் பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.	முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கிடைக்கின்ற கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத காலப்பதிற்குள் பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அமைச்சின் சமய, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் ஆகிய மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைத்து பொதுவாக பதிலளிக்க வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து தகவல் பெற்று பதிலளிக்க வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் பழைய அறிக்கைகளை பரிசீலித்து பதிலளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் 03 கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளிப்பது தாமதமடைந்துள்ளது. இடைக்காலப் பதிலைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இத்தாமதத்தை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள்.
2.	உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத காலப்பதிற்குள் பதில் அனுப்பப்படாத சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டன.	முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கிடைக்கின்ற கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத காலப்பதிற்குள் பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அமைச்சின் சமய, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் ஆகிய மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைத்து பொதுவாக பதிலளிக்க வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து தகவல் பெற்று பதிலளிக்க வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் பழைய அறிக்கைகளை பரிசீலித்து பதிலளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் 04 கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளிப்பது தாமதமடைந்துள்ளது. இடைக்காலப் பதிலைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இத்தாமதத்தை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள்.
3.	வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை பற்றிய சிபாரிசுகளும், ஏனைய சிபாரிசுகளும் உரிய காலப்பகுதிக்குள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு தொடர்பாக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் வருடாந்த பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகளை உரிய திகதியில் நிறைவு செய்ய

		நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கலாசாரப் பிரிவு தொடர்பாக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் வருடாந்த பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. • வருடாந்த பொருட் கணிப்பீடு தொடர்பில் இடம்பெறுகின்ற குறைபாடுகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களுக்கு நினைவூட்டல்கள் மூலம் விழிப்புணர்வூட்டல் மற்றும் காணாமற்போன பதிவேடுகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களுக்கு நினைவூட்டல் அனுப்புவதை துரிதப்படுத்தல். • பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களிடம் நிதி அறவிடுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களை உரிய காலப்பகுதிக்குள் விழிப்புணர்வூட்டல் மற்றும் தாமதமடைதல் தொடர்பாக நினைவூட்டல்களை அனுப்பல் தேசிய மரபுரிமைகள் பிரிவு தொடர்பாக 2020 ஆகஸ்ட் மாதம் தேசிய மரபுரிமைகள், அரங்காட்டற்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் இராஜாங்க அமைச்சு புதிதாக தாபிக்கப்பட்டதுடன், இந்த இராஜாங்க அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்ட பெரும்பாலான அலுவலர்கள் பயிற்றப்பட்ட பயிலுனர் பட்டதாரிகளாவார்கள். புதிய அலுவலர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பீட்டுப் பணிகளை உரிய காலப்பகுதிக்குள் முறையாக நிறைவு செய்ய முடியாது போனதன் காரணமாக உரிய திகதிக்குள் பொருட் கணிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொடுக்க முடியவில்லை. எனவே, 2022 ஆம் ஆண்டுக்குரிய பொருட் கணிப்பீட்டுக்கமைய மிகை மற்றும் குறைகளை இனங்கண்டு அடுத்தகட்டப் பணிகளை அமுல்படுத்த முடியவில்லையாயினும், தற்போது 2023 மற்றும் 2024 இன் பொருட் கணிப்பீட்டுப் பணிகளின் கீழ் இனங்காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பான சிபாரிசுகளுக்கமைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4.	சகல வாகனங்களினதும் உரித்தை உறுதி செய்யும் கடிதங்கள் தம்வசம் இருக்கவில்லை.	புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு தொடர்பான சகல வாகனங்களினதும் உரித்தை உறுதி செய்துகொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கலாசார அலுவல்கள் பிரிவுக்குரிய அமைச்சுக்கு சாட்டுதல் செய்துகொள்ள வேண்டிய வாகனங்களை சாட்டுதல் செய்துகொள்வதற்கு 2025.11.11 ஆம்

		திகதிய கடிதம் சகல ஆவணங்களுடனும் கொம்ப்ட்ரோலர் ஜெனரலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2020 ஆகஸ்ட் மாதம் புதிதாக தாபிக்கப்பட்ட தேசிய மரபுரிமைகள், அரங்காட்டற் கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சகல வாகனங்களினதும் உரித்தை சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் 2023 ஆம் ஆண்டு மீண்டும் அமைச்சுக்கள் மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக சகல வாகனங்களிதும் உரித்தை முறையாக சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்ள முடியவில்லை. எனினும் தற்போது றீ முஞ-0740 ஆம் இலக்க வாகனம் தவிர ஏனைய சகல வாகனங்களிதும் உரித்து முறையாக சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டுள்ளன. ஆவணங்கள் காணாமற் போனமை காரணமாக சாட்டுதல் செய்துகொள்வது தாமதமடைந்துள்ள மேற்படி வாகனத்தை முறையாக சாட்டுதல் செய்துகொள்வதற்கான அடுத்த கட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், 2024 ஆம் ஆண்டு மீண்டும் அமைச்சுக்கள் மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக சகல வாகனங்களிதும் உரித்தை முறையாக சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்ள முடியவில்லை. எனினும் தற்போது றீ முஞ-0740 ஆம் இலக்க வாகனம் தவிர ஏனைய சகல வாகனங்களிதும் உரித்து முறையாக சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டுள்ளன. ஆவணங்கள் காணாமற் போனமை காரணமாக சாட்டுதல் செய்துகொள்வது தாமதமடைந்துள்ள மேற்படி வாகனத்தை முறையாக சாட்டுதல் செய்துகொள்வதற்கான அடுத்த கட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
5.	சகல வாகனங்களிலும் அரச சின்னம் பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	சகல வாகனங்களிலும் அரச சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.
6.	ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 08 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருக்கவில்லை.	புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவின் 18-4263 ஆம் இலக்க வாகனம் சேதமடைந்த நிலையில் 2025 ஆம் ஆண்டு அகற்றலுக்கா ஏலம் விடப்பட்ட போதிலும் உரிய விலைமதிப்புப் பெறுமதிக்கு மேற்பட்ட பெறுமதிகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அகற்றப்படவில்லை. 2026 ஆம் ஆண்டில் மீண்டும் அகற்றல் நடவடிக்கைகளுக்காக ஏற்கெனவே விலைமதிப்புச் செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2026.06.30 ஆம் திகதிக்கு முன்னர் ஏலம் விடும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவுள்ளன. கலாசாரப் பிரிவுக்குரிய பயன்படுத்தப்படாத மோட்டார் வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக

		அகற்றல் குழு நியமனம் செய்யப்பட்டு அதன் சிபாரிசுகளுக்கு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023 கணக்கு ஆண்டினுள் தேசிய மரபுரிமைகள் பிரிவுக்கு உரித்தான அவ்வாறான வாகனங்கள் காணப்படவில்லை.
7.	உரிய காலப்பகுதியையும் தாண்டி ஏற்பாடுகள் வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன.	புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு தொடர்பாக கிராமிய பௌத்த விஹாரைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம், புனிதபூமி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிலைபேறான புண்ணியக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் மூலம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. கட்டுவாபிட்டிய புனித செபஸ்தியன் தேவாலயத்தில் அறநெறிப் பாடசாலைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2023 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.மி. 45 ஆன ஏற்பாடுகள் போதியதாக இல்லாமை காரணமாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் வேறு செலவுத் தலைப்புக்களிலிருந்து மாற்றல் செய்யப்பட்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏற்பாடுகள் போதியதாக இல்லாமை காரணமாக வேறு செலவுத் தலைப்புக்களில் எஞ்சியுள்ளதை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொண்டு மாற்றல் செய்ய வேண்டி ஏற்பட்டதனால் ஏற்பாடுகள் மூன்றாம் காலாண்டின் பின்னர் செலுத்தப்பட்டுள்ளது. கலாசாரப் பிரிவு தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் கலாசார நிலையங்களிலிருந்து கிடைத்த கோரிக்கைகளுக்கமைய அவசரத் தேவைகளின் அடிப்படையில் இறுதிக் காலாண்டிலும் ஏற்பாடுகளை விடுவிக்க வேண்டி ஏற்பட்டது. தற்போதும் கலாசார நிலையங்களிலிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளை அவதானிப்புச் செய்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமான பணிகளை இனங்கண்டு அவற்றை முன்னுரிமைப்படுத்தி ஏற்பாடுகளை விடுவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டின் செயற்றிட்டத்திற்கு அமைய செலவுத் தலைப்புக்கள் 06 இன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் இதுவரை சுமார் 60% ஆன தொகைகள் மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

8.	ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்பட்டு வருகின்ற நிலுவைக் கடன் மீதி உள்ளமை.	பௌத்த கல்வி மற்றும் சமய விவகாரப் பிரிவு தொடர்பான நிலுவையில் உள்ள கடன் தொகைகள் செலுத்தப்பட்டுவிட்டன. கலாசாரப் பிரிவின் கீழ் ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்பட்டு வருகின்ற கடன்பட்டோர் 29 பேர் தொடர்பாக 2026.04.20 ஆம் திகதிக்கு ரூபா 2,327,580.03 ஆன கடன் நிலுவை காணப்படுகின்றது. இது சம்பந்தமான தற்போதைய நிலைமை பின்வருமாறாகும். * கடன்பட்ட ஒருவர் தொடர்பாக ரூபா 128,732.00 ஆன கடன் நிலுவை மே மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. * கடன்பட்டோர் 04 பேர் தொடர்பிலான ரூபா 137,845.00 ஆன கடன் நிலுவை தற்போது அறவிடப்பட்டு வருகின்றது. * கடன்பட்டோர் 11 பேருக்குரிய ரூபா 888,034.55 ஆன நிலுவைக் கடன் தொகைகள் மற்றும் கடன்பட்டோர் 02 பேருக்குரிய ரூபா 172,743.48 ஆன நிலுவைக் கடன் மீதியை அவர்களின் ஓய்வூதியம் மற்றும் மரணப் பணிக்கொடை தயார் செய்யப்பட்டதன் பின்னர் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். * கடன்பட்டோர் 02 பேருக்குரிய ரூபா 197,950.00 ஆன நிலுவைக் கடன் மீதி காணப்படுவதுடன் வழக்கு இலக்கம் 8403/ஆ இன் கீழ் கடுவளை மாவட்ட நீதிமன்றத்திலும் மற்றும் வழக்கு இலக்கம் ட4812.∵.12 இன் கீழ் நுகேகொட நீதவான் நீதிமன்றத்திலும் மேற்படி கடன்பட்டோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. * கடன்பட்டோர் 09 பேர் தொடர்பான ரூபா 802,275.00 ஆன நிலுவைக் கடன் மீதி காணப்படுவதுடன், இதனை உடனடியாக தீர்த்துவைக்குமாறு அறிவித்து குறித்த கடன்பட்டோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தேசிய மரபுரிமைகள் பிரிவு தொடர்பாக திடீர் விபத்துக்கு ஆளான சாரதி திரு ஆர்.ஏ.எச்.டி.எஸ். ரணவக்க தொடர்பாக ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக காணப்பட்டுவருகின்ற நிலுவைக் கடன் மீதி உள்ளதுடன், இவர் 2024.11.12 ஆம் திகதி முதல் மருத்துவ சிபாரிசின் பேரில் ஓய்வுறுத்தப்பட்டுள்ளார். அதற்கமைய ரூபா 120,570.00 ஆன நிலுவை இடர் கடன் தொகை 2026.03.23 ஆம் திகதி தீர்க்கப்பட்டுள்ளது.

9.	பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு தொடர்பாக களனி வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் ஏ ஆம் கட்டம் தொடர்பாக தடுத்துவைக்கப்பட்ட தொகையாக பொது வைப்புக் கணக்கிலுள்ள நிதி 2026.06.15 ஆம் திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. கலாசாரப் பிரிவு தொடர்பாக 6000-13-0-138 (மூன்றாம் தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள வைப்பு) பொது வைப்புக் கணக்கின் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. *6000-16-0-73 (ஒப்பந்த தடுத்துவைக்கப்பட்ட வைப்புக்கள்) பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்களுக்கு நி.பி. 571 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அமரதேவ அசபுவ கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருவதன் காரணமாக அமரதேவ அசபுவ கட்டிடத்தை நிர்மாணிப்பது தொடர்பான தடுத்துவைக்கப்பட்டுள்ள வைப்புத்தொகை பொது வைப்புக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. தேசிய மரபுரிமைகள் பிரிவு தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் காலாவதியான வைப்புக்கள் இருக்கவில்லை.
10.	நி.பி. 371 இற்கமைய வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்காலக் கட்டுநிதி குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது மேற்படி சகல பணி குறித்த இடைக்கால கட்டுநிதிகளையும் பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
11.	நிறுவனத்தின் கணக்கு பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம், தகுதியான /ஒப்புதலளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	தலைப்பு இலக்கம் - 101 – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஐஐ (ஐ) ஆம் பிரிவுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்புரை அறிக்கையின் 1.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தடுத்துக் கொள்வதற்கு மற்றும் தேவையான சீராக்கல்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
12.	அலுவலர்களினால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்துக்காக நி.பி. 156(1) இற்கமைய அறவிடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டு புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு தொடர்பாக இடம்பெற்ற யு4 அளவிலான பிரதிபண்ணும் தாள்களின் திருட்டு தொட்பாக மேற்கொள்ளப்பட்ட நி.பி. 104(4) விசாரணைக்கமைய அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 320,450 .00 ஆன நட்டத்தை

		அறவிட்டுக் கொள்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டதுடன், இதில் 5% ஆன தொகை அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. மற்றைய அலுவலரிடம் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 304,427.50 ஆன தொகையில் இதுவரை ரூபா 101,475.25 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை ரூபா 25,368.95 வீதம் 2026 நவம்பர் மாதம் வரை அறவிடப்படவுள்ளது. அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
13.	நி.பி. 119 இற்கமைய அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.	மிகைக் கட்டணம் எதுவும் அறிக்கையிடப்படவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

	செயற்குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் / குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள்	**குறைபாடுகளை நிவர்த்தி செய்ய குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் / தற்போதைய நிலைமை**
1.	2004.05.11 ஆம் திகதிய 171∴2004 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின்படிஇ அரசாங்க சம்பள ஊதிய கொடுப்பனவுகளைத் தயாரிக்கும் மென்பொருளுக்கான கடவுச்சொல்லை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றி அமைக்கத் தவறியமை.	சம்பள ஊதிய கொடுப்பனவுகளைத் தயாரிக்கும் கணினி மென்பொருளுக்கான கடவுச்சொல்லை மாற்றி அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
2.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு வினவல்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கத் தவறியமை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
3.	உள்ளக கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்காத சந்தர்ப்பங்கள் குறித்து அறிக்கை செய்யப்பட்டுள்ளன.	உள்ளக கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
4.	நிதிப் பிரமாணம் 134(2) இன் படிஇ கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட	உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டம் வருட ஆரம்பத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

	ஆரம்பத்திலேயே உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டத்தைத் தயாரிக்கத் தவறியமை.	
5.	2020.08.28 ஆம் திகதிய 01/.2020 ஆம் இலக்க அரச திறைசேரி சுற்றறிக்கையின் முதலாம் பகுதியின் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள்இ நிதிப் பிரமாணம் 756(6) இன் படி மெய்யாய்வுக் கணிப்புகளை / சொத்துக் கணக்கெடுப்புகளை மேற்கொண்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கத் தவறியமை.	பண்டங்கள் / சொத்து இருப்புகளை ஒப்பீடு செய்வது தொடர்பான குறைபாடுகள் இன்னும் நிலவுவதால்இ அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
6.	வருடாந்த மெய்யாய்வுக் கணிப்பு / சொத்துக் கணக்கெடுப்பின் போது கண்டறியப்பட்ட மிகை இருப்புகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாகவும்இ ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் குறித்த கால எல்லைக்குள் நடவடிக்கை எடுக்கத் தவறியமை.	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மெய்யாய்வுக் கணிப்பு / சொத்துக் கணக்கெடுப்புப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிறைவடைந்துள்ளனஇ மேலும் 2025 ஆம் ஆண்டுக்கான சொத்துக் கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருடாந்த மெய்யாய்வுக் கணிப்பு / சொத்துக் கணக்கெடுப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட வேண்டிய பொருட்களுக்காக விலைமனுக்கள் கோரப்பட்டுஇ அவற்றை விற்பனை செய்யவும் அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
7.	ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான தினசரி போக்குவரத்து ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கத் தவறியமை.	ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான தினசரி போக்குவரத்து ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகள் என்பன உரிய முறையில் பேணப்பட்டு வருகின்றன.
8.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையை வரைய / பொறிக்கத் தவறியமை.	பெயர்ப்பலகையில் அரச இலச்சினை அச்சிடப்பட்டுள்ளது.
9.	ஒவ்வொரு வாகனத்திற்குமாக நாள் விவரக் குறிப்பேடுகளை	திணைக்களத்தின் அனைத்து வாகனங்களுக்குமான நாள் விவரக் குறிப்பேடுகள்

	இற்றைப்படுத்தப்பட்ட அமைப்பில் பேணத் தவறியமை.	இற்றைப்படுத்தப்பட்ட அமைப்பில் பேணப்பட்டு வருகின்றன.
10.	ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ள கடன் பற்று மீதிகள் காணப்படுகின்றமை.	தற்போது நிலுவையில் உள்ள கடன் பற்று மீதிகள் செலுத்தப்பட்டுள்ளன.
11.	தயாரிக்கப்பட்டிருந்த மனித வளத் திட்டத்தின் ஊடாக மொத்தப் பணியாளர்களில் 50மூ இற்கும் அதிகமானோருக்கு வருடம் ஒன்றிற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத ஒரு பயிற்சி வாய்ப்பையேனும் உறுதி செய்யத் தவறியமை	2025∴2026 ஆண்டிற்கான மனித வளத் திட்டத்தில் குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்கள் உள்ளடக்கப்படும் வகையில் பயிற்சி அமர்வுகள் சேர்க்கப்பட்டுள்ளன
12.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு வினவல்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கத் தவறியமை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
13.	மனித வள மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும்இ திறன் மற்றும் ஆளுமை மேம்பாட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குமாக நிறுவனத்தினுள் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயரிடப்படாமை.	நிர்வாகப் பிரிவில் நிலவிய வெற்றிடங்கள் காரணமாக உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் தற்போது மேற்படி பணிக்காக நிர்வாக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.
14.	திட்டமிடப்பட்டிருந்த மொத்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் பிரமாணமானது 50மூ இற்கும் குறைவாகக் காணப்பட்டமை.	2025∴2026 ஆண்டிற்கான மனித வளத் திட்டத்தில் குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்கள் உள்ளடக்கப்படும் வகையில் பயிற்சி அமர்வுகள் சேர்க்கப்பட்டுள்ளன.
15.	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் காணப்பட்டமை.	குறித்த அபிப்பிராயங்களுக்குக் காரணமாக இருந்த விடயங்களை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
16.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

	தவறியமை.	
17.	உச்சக்கட்ட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை உரிய முறையில் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கத் தவறியமை.	வருடாந்த இடமாற்றம் தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிக்கப்பட்டுகின்ற சந்தர்ப்பங்களில் 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அதிகாரிகளின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாகஇ உள்நாட்டலுவல்கள்இ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும்இ இதுவரை அவர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : தொல்பொருளியல் திணைக்களம்

	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் குழுவினால் / வழங்கப்பட்ட கட்டளைகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் / தற்போதைய நிலைமை
1.	நுகர்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்பட்டிருக்கவில்லை.	இப்பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்பட்டு வருகின்றது.
2.	இடர்நேர்வுப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்பட்டிருக்கவில்லை	2023 ஆம் ஆண்டுக்குரிய இடர்நேர்வுப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
3.	2004.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்க சம்பளத் தயாரிப்பு கணினி மென்பொருளுக்குரிய முதலாவது கடவுச்சொல்லானது கணக்காளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பதவிநிலை உத்தியோகத்தரால் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இது இந்த ஆண்டு சரிசெய்யப்படும். .
4.	2004.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்க	இது இந்த ஆண்டு சரிசெய்யப்படும்.

	சம்பளத் தயாரிப்பு கணினி மென்பொருளுக்குரிய கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்பட்டிருக்கவில்லை.	
5.	கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு வினவலுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	• திணைக்களத்தின் 15 பிராந்திய அலுவலகங்கள், 99 வலய அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தின் 11 பிரிவுகளிடமிருந்து உரிய கணக்காய்வு வினவல்களுக்கான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு பதில்கள் தயாரிக்கப்படுகின்றன. • விசேட தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
6.	உள்ளக கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் பதவாகின.	விசேட தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
7.	மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் உரியவாறு நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன .2023.12.20 ஆம் திகதியன்று நடாத்தப்படவிருந்த கூட்டமானது, அமைச்சின் அவசரக் கூட்டம் ஒன்று அன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையினாலும், தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதியாக கடமைகளை அமைச்சின் மேலதிக செயலாளர் அவர்கள் தற்காலிகமாகக் கவனித்தமையினாலும் அன்றைய தினத்திற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை.
8.	வருடாந்த பொருள் இருப்புக் கணிப்பீட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகங்கள், குறைபாடுகள் என்பன தொடர்பான	2023 நிதியாண்டினுள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் சில தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், தற்போது மேலதிகங்கள், குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகளும்

	பரிந்துரைகளும் ஏனைய பரிந்துரைகளும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏனைய பரிந்துரைகளும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
9.	ஒதுக்க வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்கள வாகனங்களின் பொது 268 ஆம் மாதிரிப் படிவத்திற்கு அமைவாக நாளாந்த ஓட்டக் குறிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பொது 268 (அ (மாதிரிப் படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய, உரிய மாதத்திற்காக வாகனம் ஓடிய தூரத்தை உள்ளடக்கிச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதாந்தச் சுருக்கக் குறிப்புகள் சில வாகனங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன .எதிர்காலத்தில் எஞ்சிய நாளாந்த ஓட்டக் குறிப்புகளையும் மாதாந்தச் சுருக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
10.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் 11 வாகனங்களின் உடற்பகுதியில் இலச்சினைகள் அச்சிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய வாகனங்களுக்காக அரச இலச்சினையை 2026 ஆம் ஆண்டில் வர்ணம் தீட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
11.	வாகனம் ஒன்று பழுதடைந்த 08 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக அகற்றல்கள் எதுவும் நடைபெறவில்லை .2024 ஆம் ஆண்டுக்குரிய அகற்றல் நடவடிக்கை 2025.04.01 ஆம் திகதியன்று செய்யப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டுக்குரிய அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
12.	அரச வாகன விபத்துகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களின் (.பி.நி)பிரகாரம் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நி.பி .104 இன் கீழான 16 விசாரணைகளை நடாத்த வேண்டியிருந்த போதிலும், தற்போது 06 வாகன விபத்துகள் சம்பந்தமான நி.பி .104(4) இன் கீழான இழப்புகள் குறித்த இறுதி அறிக்கைகள்

		சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
13.	குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அப்பாற்பட்டு நிதி ஒதுக்கீடுகள் ஏனைய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.	ஒதுக்கீடுகள் தற்போது சரியாக ஒதுக்கப்பட்டு வருகின்றன.
14.	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் காணப்பட்டன.	கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
15.	நி.பி .371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதிகள் பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
16.	அங்கீகரிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி பதவியணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.	• எல்லையைத் தாண்டி பதவியணியினர் சேர்த்துக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. • தற்போது இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. • முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/CAD/DARLGY/CM ஆம் இலக்க மற்றும் 2026.04.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 11 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.
17.	2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முறைப்படி தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டில் அ.நி.சு .02/2018 இன் பிரகாரம் மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை .2026 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திட்டவரைபு வரைவு மட்டத்தில் காணப்படுகின்றது.
18.	தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் பதவியணியினரில் 50% இற்கும் கூடிய எண்ணிக்கையினருக்கு வருடமொன்றில் ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்புகள்	2026 ஆம் ஆண்டுக்கான திட்டத்தின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

	உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	
19.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளிலிருந்து வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% இலும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.	2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களுக்காகப் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
20.	நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம், முனைப்பழி மட்டத்திலானதாக / மறுக்கப்பட்ட மட்டத்திலானதாக / பாதக மட்டத்திலானதாக இருந்தது.	முனைப்பழி அபிப்பிராயமாகும்.
21.	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை .	வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சம்பந்தமாக ஏற்படுகின்ற சிக்கலான சூழ்நிலை காரணமாக சிற்சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தவிர்ந்த, ஏனைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
22.	அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்காக உள்ள 12 உத்தியோகத்தர்கள் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் கூற்றுக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.
23.	உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்களுக்காக நி.பி .156(1) இன் பிரகாரம் அறவீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.`	நி.பி .156(1) இன் பிரகாரமான அறவீடுகள் எதுவும் இருந்திருக்கவில்லை.
24.	நி.பி .119 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மேலதிகக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நி.பி .119 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மேலதிகக் கட்டண அறவீடுகள் எதுவும் இருந்திருக்கவில்லை.

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

	குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் / வழங்கப்பட்ட உத்தரவுகள்	**குறைபாடுகளைச் சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை**
1	அபாயப் பதிவேடு (Risk Register) புதுப்பிக்கப்பட்ட நிலையில் பராமரிக்கப்படவில்லை.	அபாயப் பதிவேடு தற்போது புதுப்பிக்கப்பட்ட நிலையில் பராமரிக்கப்படுகிறது.
2	11.05.2004 ஆம் திகதியிட்ட 171/2004 அரசுக் கணக்குச் சுற்றறிக்கையின் படி அரசின் சம்பளத் தயாரிப்பு மென்பொருளுக்கான கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படவில்லை.	சம்பளத் தயாரிப்பு மென்பொருளுக்கான கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படுகின்றன.
3	உள்துறை கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படாத நிகழ்வுகள் பதிவாகியிருந்தன.	சிங்கள மொழியை கையாளக்கூடிய அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், தற்போது சம்பந்தப்பட்ட கணக்காய்வு வினவல்களுக்கு உடனடியாக பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
4	நிதி ஒழுங்கு (FR) 134(2) இன் படி கணக்காய்வாளர் நாயகத்துடன் ஆலோசித்து வருட ஆரம்பத்தில் உள்துறை கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்படவில்லை.	தற்போது உள்துறை கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
5	26.06.2017 ஆம் திகதியிட்ட 1/2017 சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 13ஆம் பிரிவின்படி செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான பொருத்தமான அதிகாரி நியமிக்கப்பட்டு கணக்குப்பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படவில்லை.	பொருத்தமான அதிகாரி நியமிக்கப்பட்டு கணக்குப்பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

6	28.08.2020 ஆம் திகதியிட்ட 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் படி பொருட்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	சம்பந்தப்பட்ட அறிக்கைகள் தற்போது கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
7	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட உபரி, பற்றாக்குறை மற்றும் பிற பரிந்துரைகள் குறிப்பிட்ட காலத்தில் அமுல்படுத்தப்படவில்லை.	சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன.
8	கையிருப்பு வாகனங்களுக்கான தினசரி பயணப் பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	அவை தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
9	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்படவில்லை.	திணைக்களத்தின் அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்பட்டுள்ளது.
10	ஒதுக்கீட்டு வரம்பை மீறி செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.	ஒதுக்கீட்டு வரம்பை மீறிய செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.
11	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்த கடன் இருப்புகள் காணப்பட்டன.	அமைச்சின் அனுமதிக்கு உட்பட்டு சம்பந்தப்பட்ட நிலுவைக் கடன் இருப்புகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
12	அங்கீகரிக்கப்பட்ட முன்னுரிமை கணக்குகளின் காலாண்டு ஒப்பீட்டு அறிக்கைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் கருவூல செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை.	இவ்வறிக்கைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
13	20.09.2017 ஆம் திகதியிட்ட 2017 இலக்கம் 4 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி பணியாளர் தகவல்கள் காலாண்டு முடிவடைந்த ஒரு மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை.	பணியாளர் தகவல்கள் ஒரு மாதத்திற்குள் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
14	பொதுமக்கள் கோரும் தகவல்கள் வழங்கப்பட்டதா அல்லது	சம்பந்தப்பட்ட பதிவேடு தற்போது பராமரிக்கப்படுகிறது.

	மறுக்கப்பட்டதா என்பதற்கான பதிவேடு பராமரிக்கப்படவில்லை.	
15	குடிமக்கள்/சேவைப் பெறுநர் சாசனம் (Citizen Charter) அமுல்படுத்தப்படுவதை கண்காணிக்க அல்லது மதிப்பிட ஒரு முறைமை ஏற்படுத்தப்படவில்லை.	சம்பந்தப்பட்ட முறைமை தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது.
16	24.01.2018 ஆம் திகதியிட்ட 02/2018 அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் படி மனித வளத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் விதிமுறைகளின்படி மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
17	மனித வளத் திட்டத்தின் மூலம் பணியாளர்களில் 50% க்கும் அதிகமானோருக்கு ஆண்டுக்கு குறைந்தது 12 மணிநேர பயிற்சி வழங்கப்படுவதை உறுதி செய்யவில்லை.	பணியாளர்களில் 50% க்கும் அதிகமானோர் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்ட கள அதிகாரிகள் ஆவர். பெரும்பாலான அதிகாரிகளை உள்ளடக்கும் வகையில் 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
18	அனைத்து பணியாளர்களுக்கும் செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரித்து கையொப்பமிடப்படவில்லை.	செயல்திறன் ஒப்பந்தங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
19	மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்த மூத்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை.	இதற்காக மூத்த அதிகாரி ஒருவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.
20	திட்டமிடப்பட்ட பயிற்சிகளில் 50% க்கும் குறைவானவை மட்டுமே வழங்கப்பட்டிருந்தன.	பணியாளர் பயிற்சி வாய்ப்புகள் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளன.
21	நிறுவனத்தின் கணக்குகளுக்கான கணக்காய்வு கருத்து தகுதிவாய்ந்த (Qualified), கருத்து மறுப்பு (Disclaimer) அல்லது பாதகமான (Adverse) நிலையாக இருந்தது.	2024 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளுக்கு “தடையற்ற/சாதகமான கருத்து” (Unqualified Opinion) கிடைத்துள்ளது.
22	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள்	தற்போது பெரும்பாலான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

	நடைமுறைப்படுத்தப்படவில்லை.	
23	அதிகபட்ச சேவைக்காலத்தை நிறைவு செய்த அதிகாரிகள் முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை.	அவ்வதிகாரிகள் முறையாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல : **492**

நிறுவனத்தின் பெயர் : **பௌத்த அலுவல்கள் திணைக்களம்**

	குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள்	**குறைபாடுகளைச் சரிசெய்வதற்கு குழு எடுத்த நடவடிக்கைகள்/பரிந்துரைகளின் செயலாக்கம்/தற்போதைய நிலை**
1.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு வினாவிற்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கத் தவறுதல்	வெளியக மற்றும் உள்ளக கணக்காய்வு விசாரணைகளைப் பெற்ற பின்னர், அவை பதில்களுக்காக உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதற்கேற்ப இறுதி விளக்கங்கள் தயாரிக்கப்படுகின்றன. திணைக்களத்துக்கு வரும் கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதனை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
2.	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாத நிகழ்வுகள் தொடர்பில் அறிக்கையிடுதல்	கணக்காய்வு ஐய வினாக்களுக்குக் குறிப்பிட்ட கால எலைக்குள் பதிலளிக்க நடவடிக்கை எடுக்குமாறு பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வு ஐய வினாக்களுக்கு இதுவரை பதிலளிக்காத வழிபாட்டுத் தலங்கள், உடனடியாகப் பதிலளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.	2020.08.28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இல. 01/2020 இன் பிரிவு 11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள், பிரிவு 756 (6) இன் படி, விடங்களை ஆய்வு செய்து, உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் உரிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறுதல்	இந்த திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள், கண்டி, இரத்தினபுர மற்றும் குருநாகல் பிராந்திய அலுவலகங்கள், மகாநாயக்க சரிகாரய வளாகத்தில் உள்ள புத்த ஜெயந்தி புத்தகக் கடை, விஸ்வகோஷ அலுவலகம் மற்றும் அனுராதபுரம், மாத்தறை, களனி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று சில்மாதா பயிற்சி நிறுவனங்களும் இத்திணைக்களத்தின் கையிருப்பு கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையவையாகும். இந்த நிறுவனங்கள் அனைத்தின் இருப்பு விபர கணக்கெடுப்பு நடவடிக்கைகளும், பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்து, அடுத்து வரும் ஆண்டின் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்வுப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்படும் என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
4.	வருடாந்த இருப்பு கணக்கெடுப்பில் வெளிப்படுத் தப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பான பரிந்துரைகளும், ஏனைய பரிந்துரைகளும் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்படுத்தப் படவில்லை	மூலதியான சில்மாதா மடாலயத்தில் பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாக, பிரிவு 104(3) மற்றும் பிரிவு 104(4) இன் கீழ் ஆய்வொன்று நடாத்தப்பட்டு, 2026.04.10 ஆம் திகதிய “Bau/Ko/Mu 09/B.S./2023” என்ற கடிதத்தின்படி, தொடர்புடைய உருப்படிகள் கணக்கேடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்யப்பட்டுள்ளன. அதற்கிணங்க, குறித்த நடவடிக்கையானது நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை மாற்றும் போது, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குப் பின்னர் அவை மாற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன
5.	குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு வெளியே ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளமை	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் காணப்படும் வணக்கத்திற்குரிய வேலங்கஹாவத்த பன்னசாகர தேரரின் மரண கிருயையின்

		நிறுலவையினை அறவீடு செய்வதற்காக, ஆவணங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பட்டுள்ளன. (2025.12.03 மற்றும் 2026.04.27 ஆம் திகதிகள்)
6.	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் கடன் தொகைகள் காணப்படுகின்றமை.	அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு, எனக் குறிப்பிடப்பட்டு, 2026.05.04 ஆம் திகதிய "DBA/05/01/Various" ஆம் இலக்க கடிதம் மூலம் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், உரிய பணிகள் நிறைவு பெற்றவுடன் முற்பணத்தை உடனடியாகச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது
7.	நிதிப் பிரமாணத்தின் 371 ஆவது பிரிவின் நியதிகளின்படி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால கட்டளைகள் பணி நிறைவடைந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்படவில்லை	2024.07.29 இலிருந்து இன்று வரை, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தகவல் கோரிக்கைகளுக்கான மேன்முறையீடுகளின் பதிவு மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதிவேடுகள் பேணப்படுகின்றன
8.	கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்படாமை தொடர்பான முறைப்பாடுகளினை ஆவணப்படுத்தத் தவறுவதும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விபரிக்கும் பதிவேடுகளைப் பராமரிக்கத் தவறுவதும் ஆகும்.	2026.01.01 ஆம் திகதியிலிருந்து இற்றைப்படுத்தப்பட்ட பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான dbagovlk.org மூலம் பொதுமக்கள் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
9.	நிறுவனம் குறித்த தேவையான தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக ஒரு வலைத்தளமொன்றினை உருவாக்கிப் பராமரிக்கத் தவறியமை	பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 (1) ஆனது, செயலாற்றுகை உடன்படிக்கைகளில் கையொப்பமிட வேண்டிய அவசியமில்லை எனக் கூறுகின்றது.
10.	செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு அனைத்து	வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல.01/2023 இன் படி, 2023 ஆம் ஆண்டிலிருந்து அரசு செலவின

	ஊழியர்களாலும் கையொப்ப மிடப்படவில்லை	முகாமைத்துவத்தின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு அத்தியாவசியப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்படும்.
11.	பெற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கையானது, திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்துள்ளது.	பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் 5 ஆண்டுகள் பணிபுரிந்த அனைத்து உத்தியோகத்தர்களின் விபரங்கள் அடங்கிய ஆவணமானது, இடமாற்றத்தைப் பரிந்துரைத்து, 2023 ஆம் ஆண்டில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, இத்துறையினைச் சேர்ந்த 10 உத்தியோகத்தர்கள் 2026 ஆம் ஆண்டில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.
12.	அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படவில்லை.	இத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் பௌத்த அலுவல்கள் இணைப்பாளர்/அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உதவியாளர் சேவை அதிகாரிகளுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை தயாரிக்கப்பட்டு, 2023.03.28 ஆம் திகதியன்று அரச சேவை ஆணைக்குழுவிடமிருந்து அங்ீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டு முதல் வருடாந்த உள்ளக இடமாற்றங்கள் அமுல்படுத்தப்படும். அதற்கிணங்க, 2026 ஆம் ஆண்டில் 189 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனவே, அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாராளுமன்றப் பிரசுரத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : கலாசார அலுவல்கள் திணைக்களம்

	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் குழுவினால் / வழங்கப்பட்டுள்ள கட்டளைகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பரிந்துரைகளை / தற்போதைய நிலைமை / நடைமுறைப்படுத்துதல்
1	இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டுப் பேணப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால், 2025 ஆம் ஆண்டு வரை இத்திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இத்திணைக்களம் தொடர்பான இடர் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை 2025.10.09ஆம் திகதியன்று அமைச்சின் செயலாளரினால் உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிலிருந்து இத்திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டது. அத்துடன், 2026 ஆம் ஆண்டிலிருந்து இத்திணைக்களம் தொடர்பான இடர் பதிவேடு பேணப்பட்டு வருகின்றது.
2	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை	கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய பதில்களைக் குறிக்கப்பட்ட திகதிகளுக்குள் சமர்ப்பிப்பதற்கு அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களத்தினால் பல்வேறு அரச விழாக்கள் பல தொடர்ச்சியாக நடாத்தப்பட்டமையின் காரணமாக, அதிகாரிகள் வேலைப்பளுவுக்கு உள்ளாகி யிருந்தமையால், சில கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குப் போதிய காலம் தேவைப்

		பட்டமையினால் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், தற்போதைய நிலையில் குறித்த தாமதங்களைத் தவிர்த்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம், 201808.01. ஆம் திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை	கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால், 2025 ஆம் ஆண்டு வரை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மூலமாக இத்திணைக்களம் தொடர்பான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2026 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றும் அதிகாரியின் ஊடாக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளமையினால், இவ்வருடத்திலிருந்து குழுவின் கட்டளைகளுக்கமைய செயலாற்ற கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.
4	நி .பி.134 (3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால், 2025 ஆம் ஆண்டு வரை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மூலமாக இத்திணைக்களம் தொடர்பான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2026 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றும் அதிகாரியின் ஊடாக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளமையினால், இவ்வருடத்திலிருந்து குழுவின் கட்டளைகளுக்கமைய

		செயலாற்ற கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.
5	நி.பி. 134 (2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து, வருட ஆரம்பத்தில் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால், 2025 ஆம் ஆண்டு வரை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மூலமாக இத்திணைக்களம் தொடர்பான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன 2026 ஆம் ஆண்டிலிருந்து உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றும் அதிகாரியின் ஊடாக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளமையினால், இவ்வருடத்திலிருந்து குழுவின் கட்டளைகளுக்கமைய செயலாற்ற கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.
6	மீளாய்விற்குரிய வருடத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் முறைப்படி நடாத்தப்பட்டிருக்கவில்லை	கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால், 2025 ஆம் ஆண்டு வரை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மூலமாக இத்திணைக்களம் தொடர்பான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2026 ஆம் ஆண்டிலிருந்து உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றும் அதிகாரியின் ஊடாக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளமையினால், இத்திணைக்களத்தின் முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2026.03.03ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு நிரந்தர அதிகாரியொருவர் நியமிக்கப்படும் வரை, பதில் கடமையாற்றும் அதிகாரியின் கீழ் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை

		முறைப்படி நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
7	அனைத்து வாகனங்களினதும் உரிமத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை	இத்திணைக்களத்தின் கீழ் 26 வாகனங்கள் இருப்பதோடு, அவற்றுள் 25 வாகனங்களின் உரிமம் இத்திணைக்களத்திற்கு மாற்றியமைக்கப்பட்டு, அவற்றின் பதிவுச் சான்றிதழ்கள் திணைக்களத்தின் வசம் உள்ளன. எஞ்சிய வாகனத்தின் உரிமத்தை மாற்றியமைப்பதற்கான தேவையான ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
8	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை	தற்போது திணைக்களத்தின் சகல வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது.
9	மீளாய்விற்குரிய வருடத்திலோ அல்லது அதற்கு முற்பட்ட வருடங்களிலிருந்தோ நிலுவையில் இருந்த செயலற்ற வங்கிக் கணக்குகள் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை	திணைக்களத்தின் அனைத்து செயலற்ற வங்கி கணக்குகளும் சீர்செய்யப்பட்டுள்ளன.
10	வங்கி கணக்கு இணக்கக் கூற்றுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட, சரிசெய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் சீர்செய்யப் பட்டிருக்கவில்லை	வங்கி கணக்கு இணக்கக் கூற்றிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைச்சு செயலாளரினால் 2024.12.30 ஆம் திகதியிடப்பட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு, அக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய சரிசெய்யப்பட வேண்டிய மீதிகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.
11	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து நிலுவையிலுள்ள கடன் மீதிகள் காணப்பட்டன.	இந் நிலுவையிலுள்ள கடன்களை வசூலிப்பது தொடர்பில் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததோடு, குழுவின் பரிந்துரைகள் 2026.04.30ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அப்பரிந்துரைகளுக்கமைய கடனை வசூலிக்கும் நடவடிக்கைகள்

		ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
12	நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்காலிக இடைக்கால முற்பணங்கள், பணிகள் நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை	இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய நிலையில் வழங்கப்படும் அனைத்து தற்காலிக இடைக்கால முற்பணங்களும் ஒரு மாத காலத்திற்குள் சீர் செய்யப்பட்டு வருகின்றன.
13.	முழுப்பணியாளர்களையும் உள்ளடக்கியதாகச் செயல்திறன் உடன் படிக்கைகள் தயாரிக்கப்பட்டு, உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை	2023.11.30 ஆம் திகதியிடப்பட்ட 02/2018 (I) ஆம் இலக்கப் பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், முழுப்பணியாளர்களையும் உள்ளடக்கியதாகச் செயல்திறன் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை
14.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளிலிருந்து வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% இலும் பார்க்கக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது	இத்திணைக்களத்தினால் வருடம் முழுவதும் கிட்டத்தட்ட 20 அரச விழாக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், அவ்விழாக்களுக்காக அதிகாரிகள் வேலைப் பழுவுடன் காணப்பட்டமையினால், கடந்த காலப்பகுதியில் பயிற்சி வாய்ப்புகளுக்காக அதிகாரிகளை ஈடுபடுத்துவது குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது எனினும், தற்போது பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 02/2018 மற்றும் 02/2018 (1) ஆகியவற்றின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதிகாரிகள் பயிற்சிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.
15.	நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயமானது, தகைமைக்குட்பட்ட மட்டத்தில் / மறுக்கப்பட்ட மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் காணப்பட்டது	நிதிச் செயல்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க, உண்மையானதும் நியாயமானதுமான நிலையைப் பிரதிபலிக்கின்றது என்பதே கணக்காய்வின் அபிப்பிராயமாகும்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 492

நிறுவனத்தின் பெயர் : இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

	அரச கணக்கு குழுவினால் அடையாளப்படுத்தப்பட்ட குறைபாடுகள்	**நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ∴ தற்போதைய நிலை**
1.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை.	மொழிபெயர்ப்பு தொடர்பான சிக்கல் காரணமாக, ஒரே ஒரு கணக்காய்வு வினா (ஊயுயு.∴ஊ.∴னுர்யு.∴2023.∴யுஞ.∴02) மட்டும் ஒரு மாதத்திற்கும் மேலாகத் தாமதமானது. அதன் பிறகு, அது போன்ற தாமதங்கள் எதுவும் ஏற்படவில்லை.
2.	2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் 2018.08.01 ஆம் திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படாமை	2024 ஆம் ஆண்டு முதல் அனைத்து உள்ளக கண்க்காய்வு அறிக்கைகளின் நகல்களும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன.
3.	நிதி ஒழுங்கு விதி 134(2)இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியுடன் கந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு நாயகருடன் கலந்தாலோசித்த பிறகு, ஆண்டின் தொடக்கத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
4.	ஆண்டிற்கு தேவையான எண்ணிக்கையிலான கணக்கு மற்றும் மேலாண்மை குழு கூட்டங்கள் நடத்தப்படவில்லை.	2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே இரண்டு, மூன்று முகாமைத்துவ கணக்காய்வு குழு கூட்டங்கள் நடைபெற்றன. இந்த ஆண்டில் போதுமான எண்ணிக்கையிலான கூட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
5.	2020.08.28 ஆம் திகதிய 01.∴2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி1இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எலலைக்குள் நி.ஒ.756(6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	பொருள் கணக்கெடுப்பு பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை தலைமை கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. தொடர்புடைய சுற்றறிக்கையின் தேவைகளுக்கு இணங்குவதையும் எதிர்காலத்தில் உரிய நேரத்தில் சம்ப்பிப்பதையும் உறுதி செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

6.	வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	மிகை மற்றும் பற்றாக்குறைகள் குறித்த பரிந்துரைகளை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
7.	ஒரு வாகம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை.	பழுதடைந்த வாகனம் பின்னர் 2024ல் அப்புறப்படுத்தப்பட்டது. வாகனப் பதிவு ரத்து செய்யும் பணி, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் துறையால் 10.09.2024 அன்று நிறைவு செய்யப்பட்டது.
	வங்கி இணக்க கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட சீராக்கல் செய்யப்படவேண்டிய மிதிகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகளின்படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒருமாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	குசு 395(ஊ) க்கு இணங்க, மார்ச் 2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் மாதாந்த வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
8.	ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்படவில்லை.	குசு 113(6) இன் படி, 28.08.2020 தேதியிட்ட பொது நிதி சுற்றிக்கை எண் 01.∴2020 க்கு இணங்க, ரூ.46,462.∴- தொகையானது 31.12.2024 அன்று பதிவளிக்கப்பட்டது. திரு எஸ். கந்தசாமியிடமிருந்து வரவேண்டிய ரூ.220,800.∴- நிலுவைக் கடன் தொகை, நான்கு முறை நினைவுட்டல்கள் விடுக்கப்பட்ட போதிலும் வசூலிக்கப்படாமல் உள்ளது. அந்த அதிகாரி பதிலளிக்கத் தவறியதால், சட்ட நடவடிக்கை தொடங்குவதற்காக இந்த விவகாரம் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சகத்தின் சட்ட அதிகாரிக்கு அனுப்பப்பட்டது. சட்ட அதிகாரி, சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் மூலம் அதிகாரியனி முகவரியைச் சரிபார்க்கக் கோரியுள்ளார். மேலும் அதற்கேற்ப தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
9.	ஒட்டுமொத்த கணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	இது தற்போது அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கப்படும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

10.	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	முன்னதாக, இலங்கை நிர்வாக சேவை (ஐஐ.ஃ.ஐஐஐ) அதிகாரி பதவிகளில் மூன்று வெற்றிடங்கள் இருந்தன. 2026 ஆம் ஆண்டில் முன்னதாக ஒரு ளுடுயுளு அதிகாரி நியமிக்கப்பட்டதால், வெற்றிடங்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டது. மனிதவள மேலாண்மைப் பணிகளுக்கான பொறுப்பு அதிகாரியை நியமிப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்துறை பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைக் கையாள்வதால் அனைத்து கடமைகளையும் பொறுப்புக்களையும் திறம்பட ஆதரிக்க, கூடுதலாகக் குறைந்தபட்சம் ஒரு ளுடுயுளு அதிகாரி தேவைப்படுகிறார். தற்போது நிலவும் பணியாளர் பற்றாக்குறைக்கு மத்தியிலும், பணியில் உள்ள அதிகாரிகள் மனிதவளத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளனர். மேலும் பல திறன் மேம்பாட்டுத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
11.	.திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50மூஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது	2024 ஆம் ஆண்டு முதல் இலக்கு அடையப்பட்டுள்ளது.
12.	.நிறுவத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான ஒப்புதலளிக்க மறுக்கின்ற ∴ பாதகமான மட்டத்தில் நிலவியது.	தலைமைக் கணக்காய்வாளரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைக் கையாள்வதற்காகத் தேவையான சீர்திருத்த நடடிவக்கைகள்தொடங்கப்பட்டுள்ளன. மேலும் அவை மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.
13.	ஆதிகபட்ச சேவைக்காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை.	.இத்துறை ஆண்டுதோறும், அதிகாரிகளின் இடமாற்றக் கோரிக்கைகளை ஊளு.ஃயுவு.ஃ.02 படிவத்திலும், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய அனைத்து அதிகாரிகளின் விவரங்களை ஊளு.ஃயுவு.ஃ.02 படிவத்திலும் பொது நிர்வாக அமைச்சகத்திட

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்

	குழுவினால் இனம் காணப்பட்ட குறைபாடுகள்/ குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்/ தற்போதைய நிலைமை
1	நுகர்வுக்கான பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்்லை.	2025.12.31 ஆம் திகதியளவில் நுகர்வுப் பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.
2	இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை.	தற்போதைய நிலவரப்படிஇ இடர் பதிவேடொன்றைத் தயாரித்துஇ அதனைப் இற்றைப்படுத்திப் பராமரிப்பதற்கேற்ற தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
3	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு வினவலுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	2025.12.31 ஆம் திகதியளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்துக் கணக்காய்வு வினவல்களுக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.
4	நி.பி. 134(3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024.05.01 ஆந் திகதி முதல் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்படுவதோடுஇ அதன் காரணமாக உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும்இ நிரல் அமைச்சினால் நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக் கூட்டங்களில் முனைப்புடன் பங்கேற்று வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
5	ஒதுக்கீட்டு வாகனங்களுக்கான தினசரி ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போதைய நிலவரப்படிஇ ஒதுக்கீட்டு வாகனங்களுக்கான தினசரி ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை முறையான வகையில் உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
6	ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதியாக நிலுவையிலுள்ள கடன் மீதிகள் காணப்பட்டன.	2023 ஆம் ஆண்டளவில் 14 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நிலுவையாகக் காணப்பட்டதுடன்இ அவர்களுள் மூவரைத் தவிர ஏனையோரின் கடன் மீதிகள் தற்போதைய நிலவரப்படி தீர்க்கப்பட்டுள்ளன. தனது ரூபா. 22இ936.்.- அனர்த்தக் கடன் மீதியில் ரூபா. 8இ000.00 ஆன தொகையை ரவீந்திர பண்டார என்பவர் *2026.03.11* ஆந் திகதியன்று தீர்த்துள்ளதுடன்இ எஞ்சிய தொகையை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளார். திரு. பி.பி.எஸ். பிரேமசிறி அவர்களின் கடன் மீதியைத் தீர்ப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காகஇ சம்பந்தப்பட்ட தரப்பினரை ஒருங்கிணைத்து அவரது

		வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன்இ அவ்வாறு வதிவிடம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கடன் மீதியைத் தீர்ப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். திரு. கே.எச்.எஸ்.எம். ஜயவர்தன அவர்களின் கடன் மீதியை இறப்புப் பணிக்கொடையில் இருந்து ஈடுசெய்து கொள்வதற்கான தகவல்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால்இ எதிர்காலத்தில் இக்கடன் மீதியைத் தீர்த்துக் கொள்ள முடியும்.
7	நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தேவை நிமித்த உப பணி முற்பணங்கள்இ பணிகள் நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	பாதுகாப்புப் பணிகளுக்குத் தேவையான ஒரு சில பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது சில சந்தர்ப்பங்களில் தாமதங்கள் ஏற்படுகின்ற போதிலும்இ இந்நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. *2025.12.31* ஆந் திகதியளவில் நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தேவை நிமித்த உப பணி முற்பணங்கள்இ பணிகள் நிறைவடைந்து ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
8	வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கையை முறையாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கை எனது இலக்கம் னுயே.∴5.∴னுழு1.∴5.∴2023 மற்றும் *2025.02.17* ஆம் திகதியிடப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன்இ அது *2025.02.18* ஆந் திகதியன்று பாராளுமன்றப் பொதுச் செயலாளர் அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படிஇ குறித்த காலப்பகுதிக்குள் வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
9.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட வாய்ப்புகளின் அளவு 50மூ இலும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.	நிதிஇ பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் *2023.01.27* ஆந் திகதிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 01.∴2023 இன் படிஇ செலவினங்களைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக நிதி ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன.
10.	நிறுவனத்தின் கணக்குகள் மீதான அபிப்பிராயம் முனைப்பளியுள்ள மட்டம் / பிரகடனப்படுத்தப்படாத மட்டம் / பாதகமான மட்டத்தைக் கொண்டிருந்தது.	இது ஒரு முனைப்பளியுள்ள அபிப்பிராயமாகும்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492

நிறுவனத்தின் பெயர் - தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

	குழு இனங்கண்டுள்ள குறைபாடு / குழு வழங்கிய கட்டளை	**குறைபாட்டை சீராக்கல் செய்வதற்காக குழு மேற்கொண்ட நடவடிக்கை/சிபாரிசுகளை அமுல்படுத்தல்/ தற்போதைய நிலைமை**
1.	நிதிக் கட்டளை 94 (1) இன் படி, ஒரு செலவினத் தலைப்பிற்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்திய பிறகுநிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குப் புறம்பாக நிதி ஒதுக்கீடுகள் பிற	(1) நிதி ஒதுக்கீடு வரம்பை மீறும் வகையில் மீண்டெழும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 03 செலவினத் தலைப்புகளும் ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கானவை ஆகும். மேலும், 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்படவில்லை என்றாலும், புத்தளம் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய வெசாக் விழா உட்பட நாடு முழுவதும் நடைபெற்ற பல்வேறு விழாக்களுக்காக நடமாடும் கண்காட்சிகளுடன் ஊழியர்களை பணிக்கமர்த்த வேண்டியிருந்தது. நெந்துன்கமுவ யானையின் உருவத்தை உருவாக்கும் பணியைக் கொழும்பு இயற்கை வரலாற்று நூதனசாலையில் ஆரம்பிக்கவும், கண்டி இராச்சியக் காலத்தில் ஒல்லாந்தர்களால் கொள்ளையடிக்கப்பட்டு நெதர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள ரிஸ்க் நூதனசாலையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 06 தொல்பொருட்களை சடங்கு ரீதியாக மீண்டும் இலங்கைக்குப் பொறுப்பேற்கவும் நேரிட்டது. இவ்வாறு திட்டமிடப்படாத திட்டங்களுக்காக பணியாளர்களை அலுவலக நேரத்திற்கு மேலதிகமாக, வார இறுதி நாட்கள் மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்ததால், எஞ்சியிருந்த நிதி வரம்பை மீறி பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்குள் பிரவேசிக்க நேரிட்ட போதிலும், இதற்குரிய கொடுப்பனவுகள் 2024 ஆம் ஆண்டின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, எதிர்வரும் ஆண்டுகளில், அதாவது 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்குள் பிரவேசிக்கும் போது, நிதி ஒதுக்கீடு சம்பந்தமான குறைபாடுகளைக் குறைத்துக்கொண்டு, உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நான் நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

2.	வருட இறுதியில் எஞ்சியிருந்த ஒதுக்கீடுகள் வரம்பை மீறும் வகையில் பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.	கொழும்பு தேசிய நூதனசாலை நூலகத்திற்காக தீயணைப்புத் தொகுதி ஒன்றை நிறுவுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அப்பணி குறிப்பிட்ட கால எல்லையைத் தாண்டி வேறு ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. அதற்குக் காரணம், 2022 ஜனவரி மாதத்துடன் நிறைவடையவிருந்த மேற்படி பணி, சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயல்த் திறன் காரணமாக ரத்து செய்யவேண்டி நேரிட்டமையாகும். அதற்கமைய, ரூ. மில்லியன் 98.55 தொகையிலான நிதிக்கு முதலாவது ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பணிக்காக ரூ. 25,819,375.00 (வரி உட்பட) தொகை அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டதுடன், பிணைப் பணத்தை அரசாங்கப் பணமாக்கியதன் மூலம் தேசிய நூதனசாலைகள் திணைக்களம் ரூ. 31,930,200.00 தொகையை அறவிட்டுள்ளதுடன், பற்றுச் சீட்டுக்களில் இருந்து ரூ. 619,184.00 தொகையையும் நிறுத்தி வைத்துள்ளது. ,இதனைத் தொடர்ந்து, இப் பணியின் ஆலோசனைக் கடமைகளை மேற்கொண்ட மத்திய பொறியியல் ஆலோசனைக் பணியகத்தின் (ஊநுஊடீ) பரிந்துரையின் பேரிலும், அமப.්.23.්.1492.්.620.්.045 இலக்கமுடைய 2023.09.05 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாகவும், மீண்டும் விலை மனுக்கள் கோரப்பட்டு, கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றி, குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ரூ. 185,704,416.00 (வரி விலக்களிக்கப்பட்டது) தொகைக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், எதிர்வரும் வருடங்களான 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் இக் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொண்டு, உரிய நிதி ஒதுக்கீட்டை குறிப்பிட்ட கால எல்லைக்குள் உரிய பணிகள் மற்றும் நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
3.	நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	**(2)** ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவைக் கடன் தொகைகளைக் கொண்ட, சேவையில் இருந்து விலகிச் சென்ற 06 உத்தியோகத்தர்கள் உள்ளதோடு, அவர்களுள் இரு உத்தியோகத்தர்களின் கடன் தொகைகளை (கே. அபேவர்தன மற்றும் எம்.ஜி.டப்ளியூ.கே. மஹகொடகெதர) தற்போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டிலிருந்து

		2026.05.31 ஆம் திகதி வரையான நிலுவைக் கடன் விபரங்கள் பின்வருமாறு அமையும் **த்தியோகத்தர்களின் 2023 ஆம் ஆண்டில் 2026.05.31 திகதி நிலவரப்படி பெயர் மற்றும் பதவியும் இருந்த கடன் நிலுவை கடன் நிலுவை** **(ரூபா)** **(ரூபா)** என்.டி. திசாநாயக்க (அலுவலகப் பணியாளர் சேவை) 79,304.00 79,304.00 கே. அபேவர்தன 80,271.70 13,159.76 டப்ள்யூ.ஐ.எம்.பி. பெர்னாண்டோ (மாதிரிப் பொருட்கள் சேகரிப்பாளர்) 116,000.00 116,000.00 ஆர்.ஏ.டி. ராஜபக்ஷ (நூதனசாலை உதவியாளர்) 92,684.86 92,684.86 எம்.ஜி.டப்ளியூ.கே. மஹகொடகெதர (நூதனசாலை உதவியாளர்) 197,720.84 223,255.00
4.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50மூ க்கும் குறைவாகவே இருந்தது.	2023 ஆம் ஆண்டில் பணியாளர்களின் பயிற்சி மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 500,000.00 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 2023.12.31 ஆம் திகதியளவில் ரூ. 180,240.00 நிதி ஒதுக்கீடு (36மூ) எஞ்சியிருந்தது. அந்த வருடத்திற்குள் நூதனநாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஏேஞ தகைமை மட்டம் 05 - 06 ஐ வழங்குவதற்காக யுேஐவுயு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டை அந்த வருடத்திற்குள் செயல்படுத்த முடியாமல் போனதே இதற்குக் காரணமாகும். எனினும், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் மட்டத்தை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

5.	நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு கருத்து சம்பந்தப்பட்ட மட்டத்தில் ∴ தகுதி வாய்ந்த மட்டத்தில் ∴ சாதகமற்ற நிலையில் இருந்தது.	2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கைகள் தொடர்பாக, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் படி, கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கையில் நிதி அறிக்கைகள் சம்பந்தமாக தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு தகைமைக்குட்பட்ட தணிக்கை அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2023 சுருக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு அமையும்: (ை) இந்த சுருக்க அறிக்கையின் கருத்திற்கான அடிப்படை என்னவெனில், செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடம் இருந்து பெறப்பட்ட விசேட அனுமதி மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காகப் பெற்ற வரவு செலவுத் திட்ட நிதியின் கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஏலங்கள் கோரப்பட்டு அது தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்முதல் குழுவின் தீர்மானத்தை செயல்படுத்துவதற்காக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய பின்னர், அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பழைய வாகனமொன்று பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்காக திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது என்பதாகும். மேலும், தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 1∴2023 இன் படியும், அமைச்சின் செயலாளரின் ஆடீசுஊயு∴03∴13∴10∴2022 இலக்கம் உடைய 2023.01.26 திகதிய கடிதத்தின் மூலம் மீண்டெழும் நிதியில் 15மூ ஐயும், 2023.02.01 திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரியினால் மீண்டெழும் நிதியில் 6மூ ஐயும் சேமிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததால், அந்தக் கணக்கீட்டிற்காக இந் நிதி ஒதுக்கீடுகளும் முடக்கி வைக்கப்பட்டிருந்தன. (ை) நிதி சாரா சொத்துக்களின் கீழ், தற்போது தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வசம் சட்ட பூர்வமான உரிமையைக் கொண்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் நூதனசாலைக் கட்டிடங்கள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன: 1. கொழும்பு தேசிய நூதனசாலை (இயற்கை வரலாற்று நூதனசாலை உட்பட) 2. ஒல்லாந்தர் நூதனசாலை

		3. இரத்தினபுரி தேசிய நூதனசாலை 4. பொலன்னறுவை பண்டைய தொழில்நுட்ப நூதனசாலை 5. மாகம்புர ருஹுணு பாரம்பரிய நூதனசாலை அதேபோன்று, தொல்பொருட்கள் விலை மதிப்பற்றவை என்பதால், அப் பொருட்களை மதிப்பீடு செய்வதற்கு முறையான வழிமுறை எதுவும் இல்லை. பொதுவான பாரம்பரிய நடைமுறையின்படி, வளாகத்திற்கு வெளியே உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கண்காட்சிகளுக்காக தொல்பொருட்களைக் கொண்டு செல்லும் போது காப்பீடு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களில் மட்டுமே அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் பணிகள் பொதுவாக மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (ஹை) இலக்கம் 1.6.4 இல் உள்ள சொத்துக்கள், நிலையங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்பாடு எனும் விடயத்தின் கீழ், நெதர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்ட 06 தொல்பொருட்களை மீண்டும் இலங்கைக்குப் பொறுப்பேற்கும் போது, அவை ரூ. 2,019,460,000.00 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, அது ஒரு வெளிநாட்டு மானியமாக நிதி அறிக்கைகளில் உள்வாங்கப்பட்டதற்கான காரணம், நெதர்லாந்து அரசாங்கத்தின் தொல்பொருட்கள் தொடர்பான ஆவணங்களில் இப் பொருட்கள் அந் நாட்டு அரசாங்கத்திற்குச் சொந்தமான பொருட்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதற்கமைய, நெதர்லாந்து அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைவாக இப் பொருட்கள் இலங்கை அரசாங்கத்திற்கு மானியமாக வழங்கப்பட்டன. அதன்படி பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பெறுமதிக்காக, திறைசேரியினால் மானியங்களின் கீழ் நிதி ஒதுக்குவதற்கும், கணக்குகளில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ளை) காலி கடல்சார் நூதனசாலையின் நுழைவுச் சீட்டு விற்பனை வருமானத்தை வங்கியில் வைப்பிலிடுவதில் ஏற்பட்டுள்ள முறைகேடு தொடர்பாக, நிதிக் கட்டளை 104(4) இன் படி முழுமையான அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக விசாரணைச் சபை ஒன்று நியமிக்கப்பட்டது. அதற்கமைய, நுழைவுச் சீட்டு முறைகேடு

		தொடர்பாக அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகையாக ரூ. 1,979,705.00 கணக்கிடப்பட்டு, நிதிக் கட்டளை 104(4) இன் படி முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அவ் அறிக்கைக்கு திறைசேரி செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு இவ் அறிக்கை 2026 ஏப்ரல் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கைக்கு திறைசேரி செயலாளரின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர், அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, காலி கடல்சார் நூதனசாலையின் நுழைவுச் சீட்டு முறைகேடு காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி நட்டத்தை எதிர்வரும் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
6.	உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்களுக்காக நிதிக் கட்டளை 156(ஹ) இன் படி அறவீடுகள் செய்யப்படவில்லை.	குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணை 2026 ஜனவரி மாதத்தில் நிறைவடைந்ததுடன், ஒழுக்காற்று விசாரணை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை விசாரணை அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர் தற்போது ஓய்வு பெற்றுள்ளதால், சம்பந்தப்பட்ட அறிக்கையை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

பாராளுமன்ற கூற்றுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம

	செயற்குழுவினால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள் ∴ செயற்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள்	**குறைபாடுகளை சரிசெய்யும்பொருட்டு குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ∴ விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் ∴ தற்போதைய நிலைமை**
1.	**நி.பி.134(2)** இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியை விசாரித்தறிந்து கணக்காய்வு திட்டங்களை வருட ஆரம்பத்திலேயே தயாரிக்காமை.	2024ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை வருட ஆரம்பத்திலேயே தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2.	ஆகக்கூடிய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு உரிய விதத்தில் இடமாற்றம் வழங்கி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்தத் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் இடமாற்ற அதிகாரி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகமாகும். இடமாற்ற சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடத்திற்கு

		மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்களது விபரங்கள் மற்றும் இடமாற்ற கோரிக்கை விடுத்த உத்தியோகத்தர்களது விபரங்கள் என்பன சிபாரிசு செய்யப்பட்டு, இத்திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வருடாந்தம், உரிய திகதியில் வழங்கப்படுவதுடன், இந்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கும் பொறுப்பு இணைந்த சேவைகள் பணிப்பாளரைச் சாரும் என்பதுடன், உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குதல் இத்திணைக்களத்தின் விடயப்பரப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

....

பிரின்ஸ் சேனாதீர

செயலாளர்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

....

கலாநிதி ஹினிதும சுனில் செனெவி

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்